# இறைத்தூதன்

கத்தோலிக்க வார இதழ்


மண்ணுலகில் நீங்கள் தடை செய்பவை அனைத்தும் விண்ணுலகிலும் தடை செய்யப்படும்; மண்ணுலகில் நீங்கள் அனுமதிப்பவை அனைத்தும் விண்ணுலகிலும் அனுமதிக்கப்படும் என நான் உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். உங்களுள் இருவர் மண்ணுலகில் தாங்கள் வேண்டும் எதைக் குறித்தும் மனமொத்திருந்தால் விண்ணுலகில் இருக்கும் என் தந்தை அதை அவர்களுக்கு அருள்வார். ஏனெனில் இரண்டு அல்லது மூன்று பேர் என் பெயரின் பொருட்டு எங்கே ஒன்றாகக் கூடியிருக்கின்றார்களோ அங்கே அவர்களிடையே நான் இருக்கிறேன் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்" என்றார். (மத் 18:18-20)

# "பல்சமய ஒருமைப்பாட்டுடன் காயப்பட்ட உலகிற்கு பணிசெய்வோம், படைப்பின் மேல் அக்கறை கொள்வோம்"

## -திருத்தந்தை வேண்டுகோள்

**வத்தக்கான்**: பல்வேறு வகைகளில் காயப்பட்டிருக்கும் இவ்வுலகிற்கு, கிறிஸ்தவர்கள் என்ற முறையில் ஆற்றக்கூடிய பணிகளையும், குறிப்பாக, ஏனைய மதநம்பிக்கையாளர்களுடன் இணைந்து ஆற்றக்கூடிய பணிகளையும் சிந்திப்பதற்கு, அழைப்புவிடுத்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்

உலகெங்கும் துன்பங்களை உருவாக்கியுள்ள கோவிட்-19 கொள்ளைநோய் பரவியுள்ள சூழலில், அடுத்திருப்பவர்க்கு அன்பு காட்டி, அவர்களுக்குப் பணியாற்றுவதற்கு கிறிஸ்தவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர் என்பதன் பொருள் என்ன? என்ற கேள்வியுடன், பல்சமய உரையாடல் திருப்பீட அவை, செய்தி யொன்றை வெளியிட்டுள்ளது.

"பல்சமய ஒருமைப்பாட்டுடன், காயப்பட்ட உலகிற்கு பணியாற்றுதல்" என்ற தலைப்பில், பல்சமய உரையாடல் திருப்பீட அவையும், உலக கிறிஸ்தவச் சபைகளின் மன்றமும் இணைந்து, ஆகஸ்ட் 27, அன்று இச்செய்தியை வெளியிட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

ஏழு பகுதிகளைக் கொண்ட இச்செய்தியில், தற்போதைய நெருக்கடிநிலை, நம்பிக்கையால் உந்தப்பட்ட ஒருங்கிணைப்பு, பல்சமய ஒருங்கிணைப்புக்கு அடித்தளம், பரிந்துரைகள் என்ற பல்வேறு பிரிவுகளில், கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

கோவிட்-19 கொள்ளைநோய் உருவாக்கியுள்ள காயங்கள் போதாதென்று, மத சகிப்பற்ற நிலை, இனப்பாகுபாடு, புறக்கணிப்பு, பொருளாதார, சுற்றுச்சூழல் சீரழிவு என்ற வேறு பல சாட்டையடிகளால் பெருமளவு காயமடைந்து கிடக்கும் இவ்வுலகிற்கு, நல்ல சமாரியர் உவமை ஆழமான பாடங்களைச் சொல்லித்தருகிறது



என்று, இச்செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாம் சந்தித்துவரும் கொள்ளைநோய் வெறும் உடல்நலம் சார்ந்த ஒரு பிரச்சனை அல்ல, மாறாக, இது, சமுதாயத்தில் நிலவும் பிரச்சனைகளையும், சுற்றுச்சூழல் சார்ந்த பிரச்சனைகளையும் புரிந்து கொள்வதற்கு வழங்கப்பட்டுள்ள ஒரு வாய்ப்பு என்று இச்செய்தி வலியுறுத்திக் கூறுகிறது.

### படைப்பின் மேல் அக்கறை கொள்வோம்

தொடர்ந்து, திருத்தந்தை படைப்பு குறித்த நம் அக்கறையை உலகிற்கு வெளிப்படுத்துவோம் என்று வலியுறுத்தியுள்ளார். ஓர் ஆரஞ்சுப் பழத்தை பிழிவது போல், நாம் இவ்வுலகின் வளங்களைப் பிழிந்து எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்று அவரது ஆழந்தத் துயரை வெளிப்படுத்தினார்.

இம்மாதம் சிறப்பிக்கப்படும் படைப்பின் இறைவேண்டல் காலம் குறித்தே, இம்மாதத்திற்குரிய இறைவேண்டல் கருத்தையும் காணொளிச் செய்தியாக வெளியிட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இவ்வுலகின் வளங்களை மதிக்க நாம் கற்றுக்கொள்ளவேண்டும் எனவும், அனைவரும் இறைவேண்டல் செய்வோம் எனவும், அவரதுச் செய்தியில் விண்ணப்பித்துள்ளார்.

ஓர் ஆரஞ்சுப்பழத்தை பிழிவதுபோல், நாம் இவ்வுலகின் வளங்களைப் பிழிந்து எடுத்துக்கொண்டிருக்கிறோம் எனக் கவலையை வெளியிடும் திருத்தந்தையின் செய்தி, உலகின் வடபகுதியில் உள்ள நாடுகள், தென்பகுதியில் உள்ள வளங்களை உறிஞ்சி தங்களை வளப்படுத்திக் கொண்டன எனக் கூறுவதோடு, யார் இந்த சுற்றுச்சூழல் கடனை திருப்பி அளிக்கப்போகிறார் என்ற கேள்வியையும் முன்வைக்கிறது.

தங்கள் சொந்த நாட்டில் செய்யமுடியாத சுரண்டல்களை, பன்னாட்டு நிறுவனங்கள், ஏனைய நாடுகளில் செய்துவரும்போது, சுற்றுச்சூழல் அழிவு மேலும் அதிகரிக்கின்றது எனவும், அவரது இறைவேண்டல் விண்ணப்பத்தில் கூறியுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

இவ்வுலகின் வளங்கள், சுரண்டப்படுவதற்கல்ல, மாறாக, பகிர்ந்துகொள்ளப்படவே என்பதை, நாளையல்ல, மாறாக, இன்றே செயல்படுத்துவோம், எனவும் வேண்டிக் கேட்டுக் கொண்டார், திருத்தந்தை பிரான்சிஸ்.

# தூய ஆவியார் பேராலயத்தில் புகுமுக அருட்சாதனத் திருப்பலி கொண்டாடப்பட்டது

**பினாங்கு**: இங்குள்ள தூய ஆவியார் பேராலயத்தில் நீண்டகால ஆர்வத்தோடான காத்திருப்புக்குப் பிறகு, தேர்வுச்செய்யப்பட்ட முப்பது வேட்பாளர்கள் முதியோர்க்கான புகுமுக அருட்சாதனச் சடங்குகள் வழியாகக் கடந்த ஆகஸ்ட்டு 22-ம் திகதியன்று மாலை திருப்பலியில் புகுமுக அருளடையாளங்களைப் பெற்றனர்.

கடந்த 2019-ன் நடுப்பகுதியில் இருந்து இவர்கள் முதியோர்க்கான புகுமுக அருட்சாதன வகுப்புகள் வழியாக தங்கள் நம்பிக்கைப் பயணத்தைத் தொடங்கினர். கோவிட்- 19 பரவுதலால் இவர்களுக்கான வகுப்புகள் தடைபட்டன. ஆனாலும் புலனக்குழு (வாட்செப்) மூலம். இவர்களுக்குப் போதனையும் இதர பயிற்சிகளும் மேற்கொள்ளப்பட்டது.

இவர்களில் பிற சபைகளைச் சேர்ந்த இருவர் திருஅவைக்குள் வரவேற்கப்



பட்டனர். இவர்களுடன் ஏற்கனவே திருமுழுக்குப் பெற்ற மூன்று பேர் உறுதிப்படுத்தல் அருட்சாதனத்தைப் பெற்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அன்று திருப்பலிக்குத் தலைமை தாங்கிய பங்குத் தந்தை ஜோக்கிம் ரோபர்ட் அவர்கள் வேட்பாளர்களை வரவேற்று, அவர்களின் அமைதியான நீண்ட காத்திருப்புக்கு நன்றி கூறினார்..

தொடர்ந்து இயேசு அவர்களுக்கு யார் என்பதை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ளும்படி அவர்களுக்கு நினைவூட்டினார், "நீங்கள் கிறிஸ்துவே, உயிருள்ள கடவுளின் மகன்" என்று பேதுருவைப் போல அடையாளம் கண்டுள்ளீர்கள்" என்றும். திருமுழுக்கு மற்றும் உறுதிப்பூசுதல் ஆகிய அருட்சாதனங்கள் கிறிஸ்துவுக்கான சீடத்துவ வாழ்வுக்கு ஓர் ஆரம்பம் என்று அவர்களுக்கு எடுத்துரைத்தார்.

# பிறர் நலன் கருதி வாழ்பவரை நோய் அண்டுவதில்லை!

**எவர், மற்றவர் துயரங்கள் பற்றி சிந்திக்கத் துவங்குகிறாரோ, அவருக்கு நோய் என்பதே கிடையாது!**

1925ஆம் ஆண்டில், இலக்கியத்திற்கு, நொபெல் விருது பெற்ற ஜார்ஜ் பெர்னார்ட்டு ஷா அவர்களுக்கு, ஒரு சமயம் இதயத்தில் வலி. எனவே அவர், தன் நண்பரான ஒரு மருத்துவரைத் தொலைப் பேசியில் அழைத்து, கட்டிலில் இருந்து எழுந்திருக்க முடியாமல் இருக்கிறேன், உடனே என்னை வந்து பார் என்று சொன்னார். உடனே மருத்துவர், அவரிடம், உனக்கு அறிவிருக்கிறதா, மருத்துவமனையில் நிறைய நோயாளிகள் எனக்காகக் காத்திருக்கின்றனர். அவர்கள் அனைவரையும் விட்டுவிட்டு உன்னை வீட்டில் வந்து எப்படி பார்க்க முடியும் என்று கேட்டார்.

அதற்கு ஜார்ஜ் பெர்னார்ட்டு அவர்கள், உனக்குத்தான் அறிவில்லை, என்னால் படுக்கையைவிட்டே எழுந்திருக்க முடியவில்லை, காலையிலிருந்து ஒரு டீ கூட போட்டுக் குடிக்க முடியவில்லை, எழுந்து நிற்க முடியவில்லை, நெஞ்சு வலிக்கிறது, படுத்தே கிடக்கிறேன் என்று சொன்னார். இதைக் கேட்டதும் மருத்துவரும் புறப்பட்டு பெர்னார்ட்டு ஷா அவர்களின் வீட்டிற்கு மாடிப்படியில் ஏறி வந்து சோபாவில் அமர்ந்தார். அப்போது “ஐயோ வலிக்கிறதே” என தன் நெஞ்சில் கை வைத்தார் மருத்துவர். உடனே ஷா அவர்கள், பதறிப்போய், படுக்கையைவிட்டு எழுந்து, அடுப்பை பற்றவைத்து, சூடாக ஒரு டீ போட்டு, அதோடு ஒரு ஆஸ்பிரின் மாத்திரையையும் எடுத்துவந்து மருத்துவரிடம் கொடுத்தார். மருத்துவர் அந்த மாத்திரையை சாப்பிடும்வரை அவர் அருகிலே நின்றுகொண்டிருந்தார். சிறிதுநேரம் சென்று, இப்போது எப்படியிருக்கிறது, நெஞ்சு வலி சரியாகிவிட்டதா என்று கேட்டார் ஷா. சிறிதுநேரம் சென்று மருத்துவரும், தனது பையைத் திறந்து, கட்டணச் சீட்டில் 30 பவுண்டு என எழுதி அதை ஷா அவர்களிடம் கொடுத்தார். அதைப் பார்த்த ஷா அவர்கள், இதென்ன அநியாயம், எனக்கு மருத்துவம் பார்க்க வந்த உனக்கு நான் டீ போட்டு, மாத்திரை கொடுத்துள்ளேன், இப்போது என்னிடமே பணம் கேட்கிறாய் என்று கேட்டார்.

அதற்கு மருத்துவர், பெர்னார்ட்டு ஷா, உன்னால் எழுந்திருக்க முடியவில்லை, ஒரு டீ கூட போட்டுக் குடிக்க முடியவில்லை என்று சொன்னாய். ஆனால் இப்போது நீயே எழுந்து, எனக்கு டீ போட்டுக் கொடுத்தாய். அப்படியானால் உனது நோயை நான் குணமாக்கிவிட்டேன்தானே என்று கேட்டார் மருத்துவர். அதற்கு பெர்னார்ட்டு ஷா அவரிடம், இந்த சிகிச்சைக்குப் பெயர் என்ன என்று கேட்டார். அதற்கு மருத்துவர், ஒருவர், தன்னுடைய துயரங்களை மட்டுமே நினைத்துக்கொண்டிருக்கும்வரை, அவரால், உலகில் நீண்ட காலம் வாழ முடியாது.



எவர், மற்றவர் துயரங்கள் பற்றி சிந்திக்கத் துவங்குகிறாரோ, அவருக்கு நோய் என்பதே கிடையாது. தன்னைப் பற்றியே நினைப்பவர்களுக்கு எப்போதுமே நோய் தான். பிறரைப் பற்றி நினைப்பவர்கள், உலகில் மகான்கள் என்றார்.

*மேரி தெரேசா: வத்திக்கான்*

# மலேசிய கத்தோலிக்க ஆயர் பேரவை பெய்ருட், லெபனானுக்கு நிவாரண நிதி வழங்கியது.

**கோலாலம்பூர்**: மலேசியாவின் கத்தோலிக்க ஆயர்கள் பேரவை குட் ஷெப்பர்ட் அனைத்துலக அறவாறியத்தின் வழியாக பெய்ருட்டில் ஏற்பட்ட வெடிப்பில் பாதிக்கப்பட்ட மக்களின் நலவாழ்வுக்கு நிவாரண நிதியுதவி வழங்கியது.



*பாதிக்கப்பட்ட பெய்ருட்டின் ஒரு பகுதி*

லெபனான், பெய்ருட்டில் கடந்த ஆகஸ்ட் 4-ஆம் தேதி நிகழ்ந்த பெரும் வெடிப்பால் பாதிக்கப்பட்டவர்களின் துன்பங்களையும் கஷ்டங்களையும் போக்க உதவும் நோக்கத்தில் மனிதாபிமான நிவாரணப் பணிக்காக மேற்கண்ட பேரவை RM275,078.91 வழங்கியது.

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் நடந்த வெடிப்பு சம்பவத்தில் குறைந்தது 70 பேர் உயிரிழந்துள்ளனர். 4 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என அந்நாட்டு சுகாதாரத்துறை அமைச்சர் ஓர் அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

இந்த வெடிப்பால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் இறைவேண்டல் செய்ய வேண்டும் என்று நமது ஆயர் பேரவை அழைப்புவிடுத்துள்ளது.

# மறைபரப்பு உலக நாள், அக்டோபர் 18, 2020-ல் கொண்டாடப்படும்

**வத்திக்கான்**: இவ்வாண்டு, மறைபரப்பு உலக நாள், ஏற்கனவே அறிவிக்கப் பட்டுள்ள தேதியில், எந்தவித மாற்ற மும்இன்றி, உலக அளவில் சிறப்பிக்கப்படும் என்று, நற்செய்தி அறிவிப்பு பேராயம், ஆகஸ்ட் 28, இவ்வெள்ளியன்று தெளிவு படுத்தியுள்ளது.

உலக அளவில் நடைபெறவிருந்த பல நிகழ்வுகளின் தேதிகள், கொரோனா தொற்றுக்கிருமியின் பரவலைத் தொடர்ந்து மாற்றப்பட்டுள்ளவேளையில், இவ்வாண்டு மறைபரப்பு உலக நாள், ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளபடி, வருகிற அக்டோபர் 18, ஞாயிறன்று சிறப்பிக்கப்படும் என்று, நற்செய்தி அறிவிப்பு பேராயம், திருப்பீட தகவல் தொடர்பகம் வழியாக, வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளது.

நம்பிக்கை, தன் இயல்பிலேயே, மறைபரப்பு தன்மை கொண்டது என்றும், மறைபரப்பு உலக நாள் கொண்டாட்டம், கிறிஸ்தவ நம்பிக்கையின் முக்கிய கூறாகிய எதிர்நோக்கை, அனைத்து விசுவாசிகளிலும் உயிரூட்டம் பெற உதவுகின்றது என்றும், அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பல மறைமாவட்டங்களில், இந்த உலக நாள் தயாரிப்புகள் சில காலத்திற்கு முன்பே தொடங்கப்பட்டுவிட்டன என்றும், இவற்றில், இறைமக்களின் மறைப்பரப்பு முன்னெடுப்பு தெளிவாகத் தெரிகின்றது என்றும், அவ்வறிக்கை கூறுகிறது.



# நல்வழிப்படுத்தும் நல்லவராவோம்!

பொதுக்காலம் இருபத்தி மூன்றாம் ஞாயிற்றுக்கிழமையான இன்று நாம் செவிமெடுக்கும் வாசகங்கள் 'தீயோரை நல்வழிப்படுத்துவோம்; நல்வழியில் நாமும் நடப்போம்' எனும் கருபொருளைத் தாங்கி வருகிறது.

நற்செய்தி வாசகத்தில் ஆண்டவர் இயேசு கிறிஸ்து நமக்கெதிராகத் தீங்குசெய்யும் ஒருவரை எப்படி நல்வழிப்படுத்துவது என்பதைக் குறித்துப் பேசுகின்றார். அதற்காக அவர் மூன்று விதமான வழிகளை நமக்கு முன்வைக்கின்றார்.

1.முதலாவது, தனித்திருக்கும்போது தவற்றை எடுத்துக் கூறி, திருத்துவதாகும். இத்தகைய வழிமுறையினால் தவறு செய்தவரின் குற்றம் வெளியே தெரிவதற்கு வழியில்லை, ஆதனால் அவர் தன்னுடைய தவறு எல்லாருக்கும் தெரிந்துவிட்டதே என்ற மனவருத்தம் அடையத் தேவையில்லை.

2. இ,ண்டாவது, இரண்டு அல்லது மூன்று பேர் கொண்ட குழுவின் வழியாக தவறு செய்தவரை அணுகுவதாகும். எப்படி என்றால் ஒருவர் சொல்வதற்குச் செவிசாய்க்காதவர் நிச்சயமாக இரண்டு அல்லது மூன்றுபேர் அம்மனிதரின் தவற்றை எடுத்துச் சொல்லும்போது அவர் திருந்துவதற்கு அதிகமான வாய்ப்பு இருக்கின்றது.

3.மூன்றாவது, திருஅவையை நாடுதல். திருஅவையிடம் கூறுகின்றபோது தவறு செய்தவர் நிச்சயம் தன்னுடைய தவறை உணர்வதற்கு வாய்ப்பிருக்கிறது. ஏனென்றால் அவர் திருஅவையின் திருப்பணியாளர்களுக்கோ அல்லது ஆயருக்கோ பயப்படலாம், அல்லது அவர்கள் கொடுக்கும் தண்டனைக்கு அஞ்சி திருந்தலாம். அப்படியும் தவறு செய்தவர் தன்னுடைய தவற்றை ஏற்றுக்கொள்ளாத போதுதான் இயேசு அம்மனிதர் உங்களுக்கு வேற்றினத்தார் போன்று இருக்கட்டும் என்கிறார்.

இங்கே எதற்கு இயேச்சு ஒரு பாவி அல்லது தவறு செய்கின்ற ஒருவர் திருத்தப்படவேண்டும் என விரும்புகிறார் என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். தூய பேதுரு எழுதிய இரண்டாம் திருமுகம் 3:9ல், "யாரும் அழிந்துபோகாமல், மனம்மாற வேண்டும் என கடவுள் விரும்புகிறார்" என்று வாசிக்கின்றோம். ஆம், கடவுளின் திருவுளமே நாம் அனைவரும் வாழ்வு பெறவேண்டும் என்பதுதான். அதற்காகத்தான் அவர் இறைவாக்கினர்களை அனுப்பி, மக்கள் தங்களுடைய பாவத்திலிருந்து விடுதலை பெற விரும்புகிறார். இறைவாக்கினர் எசேக்கியேல் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய முதல் வாசகம் ஒரு பாவியின் மனமாற்றத்திற்காக நாம் என்ன செய்யவேண்டும் என்பதை நமக்கு எடுத்துரைக்கிறது. எனவே நாம் தீயோரைக் கண்டிக்காத போது தீயோரோடு சேர்ந்து நாமும் அழிவோம். அதே நேரத்தில் தீயோரை நாம் கண்டிக்க அவர்கள் மனம் திரும்பினால் அவர்களோடு நாமும் மீட்கப் பெறுவோம்.

இதுதான் இறைவார்த்தை நமக்குக் கூறும் உண்மையாக இருக்கின்றது. பல நேரங்களில் தவறான வழியில் நடக்கும் ஒருவரை நாம் கண்டிக்க நினைக்க, அவர் அதற்குச் செவிமடுக்காமல், நமக்கெதிராக எழுந்துவிட்டால் நாம் என்ன செய்வது என்று ஒதுங்கிச் செல்கிறோம். இது ஒருவிதத்தில் அடுத்தவர் மட்டில் நம்முடைய அக்கறையின்மையைக் காட்டுகிறது. நாம் ஒவ்வொருவரும் அடுத்தவருக்கு காவலாளிகள் என்ற உணர்வோடு வாழவேண்டும்.

புனித பவுல் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய இரண்டாம் வாசகத்தில் "நீங்கள் யாவருக்கும் எதிலும் கடன்படாதீர்கள். ஒருவருக்கொருவர் தன்பு செலுத்துவதே நீங்கள் செலுத்தவேண்டிய கடனாக இருக்கட்டும்" என்கிறார். ஆம், நாம் ஒவ்வொருவரும் அடுத்தவர்மீது நிபந்தனை இல்லாத, தன்னலமற்ற அன்பைக் காட்டவேண்டும். அதுதான் நாம் ஒருவர் மற்றவருக்கு செலுத்தக்கூடிய கடனாக இருக்கவேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

தவறு இழைப்போரை எக்கேடு கேட்டுப் போகட்டும் என விட்டுவிடுவோமானால், நாம் கிறிஸ்துவின் திருவுடலில் அங்கம் பெற்றுள்ளோம் என்பது பொருளற்றதாகிவிடும். அன்பு மாற்றத்தைக் கண்டு மாறாது. ஒருவர் தவறு செய்துவிட்டார் என்று எண்ணி அவர் மேல்கொண்ட அன்பை மாற்றிக்கொண்டால் அது உண்மை அன்பாகாது. இது கணவன்-மனைவி உறவுக்கும் பொருந்தும்.

*- லூர்தம்மாள், காஜாங்*

**பொதுக்காலம் 23-ஆம் ஞாயிறு**

எசே 33: 7-9
திபா 95: 1-2. 6-7. 8-9 . .
உரோ 13: 8-10
மத் 18: 15-20

**ஞாயிறு வாசகம்: ஆண்டு I**
**வாரநாள் முதல் வாசகம்: 2**
**திருப்புகழ் மாலை : வாரம் 2**